# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 329/2016

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29 ம் நாள் புதன்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பவானி | | |
| க/பெ. | சின்ன குப்பன் | வட்டம் | திருவொற்றியூர் |
| கிராமம் | பட்டினத்தார் கோயில் தெரு | வயது | 59 |
| தொழில் | இல்லத்தரசி | மாவட்டம் | திருவள்ளூர் |

## முதல் விசாரணை

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்து அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 11 வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | பதிவு புத்தகம் நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ 3 | காப்பீட்டு சான்று நகல் |
| ம.சா.ஆ 4 | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 5 | விபத்து பதிவேடு நகல் |
| ம.சா.ஆ 6 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் |
| ம.சா.ஆ 7 | காயச்சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ 8 | குற்றப்பத்திரிக்கை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ 9 | மருத்துவ விடுவிப்பின் சுருக்கம் சுகம் மருத்துவமனை அசல் |
| ம.சா.ஆ 10 | மருத்துவ செலவு ரசீதுகள் அசல் |
| ம.சா.ஆ 11 | மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல் |
| நீ.ம.சா.ஆ. 1 | மனுதாரரின் ஊனச் சான்றிதழ் அசல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் திருவொற்றயூர் மார்க்கெட் ரோடில் சாலையை கடந்த போது பைக் என்மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதன் பதிவு எண் 5612. நான் சாலையை கடந்த இடத்தில் வெள்ளை கோடு எதுவும் போடவில்லை. விபத்தில் எனக்கு வலது இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டது. வலது கால் சுண்டு விரலில் எலும்பு முறிவு காயம் ஏற்பட்டது. நான் திருவொற்றியூர் சுகம் மருத்துவமனையில் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அங்கு அறுவை சிகிச்சை செய்யவில்லை. விபத்து குறித்து எனது மகன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகார் கொடுப்பதில் 17 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வேறு நீதிமனறத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. விபத்து சமயத்தில் எனக்கு 50 வயது. நான் பழ வியாபாரம் செய்தேன். நாள் ஒன்றுக்கு ரூ.1,500/– சம்பாதித்தேன். எனது தொழில் வருமானத்தை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய அஜாக்கிரதையால்தான்

நான் சாலையின் குறுக்கே கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2 எதிர்மனுதாரர் இழப்பீடு தரவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட சொற்ப காயம் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி